

காஞ்சிபுரம் தெற்கு மாவட்டம் மதுராந்தகம் தெற்கு ஒன்றியம்சார்பில் கழகத் தலைவர் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின பிறந்தநாளை யொட்டி நல திட்டங்கள் மற்றும் பொது கூட்டத்தில் மாவட்ட செயலாளர் க.சுந்தர் எம்.எல்.ஏ. கலந்து கொண்டு சிறப்புரையாற்றினார். உடன்காஞ்சிபுரம் நாடாளுமன்ற உறுப்பினர் க. செல்வம். தலைமை கழக பேச்சாளர் ஒப்பிலாமணி . கழக இளம் பேச்சாளர் டி சிலம்பரசன் ஒன்றிய செயலாளர். பொன். சிவகுமார் மற்றும் ஒன்றிய கழக நிர்வாகிகள் உள்ளாட்சி பிரதிநிதிகள் கலந்து கொண்டனர்



முதல்வர் அவர்களின் 72வது பிறந்தநாள் நிகழ்ச்சியாக காஞ்சிபுரம் மாநகராட்சி 28 வது வட்ட மாமன்ற உறுப்பினர் வ. கமலக்கண்ணன் ஏற்பாட்டில் மாநகர செயலாளர் சி.கே.வி. தமிழ்செல்வன் தலைமையில் சிறுவேடல் க.செல்வம் எம்.பி. 500 நபர்களுக்கு அறுசுவை உணவு வழங்கினார். உடன் சன்பிராண்ட் கே.ஆறுமுகம், எஸ். சந்துரு, கே.திலகர், ஜி.சுகுமாரன், கே.ஏ.செங்குட்டுவன், ஏ.எஸ். முத்துசெல்வம், பி.நிர்மலா, எஸ். சுகுமாரன், உள்பட பலர் கலந்து கொண்டனர்.

### ஆந்திர மாநிலம் எலூரு முதல் புதுச்சேரியை இணைக்கும்

# தேசிய நீர்வழி போக்குவரத்துத் திட்டத்தை நிறைவேற்றுக!

## மக்களவையில் – டாக்டர் கலாநிதி வீராசாமி வலியுறுத்தல்!

புதுடெல்லி, மார்ச் 17-

“ஆந்திர மாநிலம் எலூரு முதல் புதுச்சேரியை இணைக்கும் தேசிய நீர்வழி போக்குவரத்துத் திட்டத்தை நிறைவேற்ற வேண்டும்” என்று நாடாளுமன்ற மக்களவையில் கழக உறுப்பினர் கலாநிதி வீராசாமி வலியுறுத்தினார்.

இந்த மசோதாவின் மீது நடைபெற்ற விவாதத்தில் கலந்து கொண்டு அவர் பேசியதாவது:-

இம்மன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டுள்ள லேண்டிங் பில் என்னும் சரக்கு பட்டியல் ரசீது மசோதாவின் மீது நடைபெறும் விவாதத்தில் பங்கு பெற வாய்ப்பு தந்தமைக்கு எனது நன்றியை முதற்கண் தெரிவித்துக் கொள்கிறேன்.

மேலும், இம் மசோதாவின் பெயரை இந்தியிலோ அல்லது சமஸ்கிருதத்திலோ வைக்காமல், அப்படியே ஆங்கிலத்தில் வைத்துள்ளதற்கு எனது நன்றியை அமைச்சருக்கு தெரிவித்துக் கொள்கிறேன். ஏனெனில், இவ்வாறு ஆங்கிலத்தில் வைத்துள்ளதால் என்னைப் போன்றவர்களுக்கு அதன் பொருள் எளிதாகப் புரிகின்றது. “ ஒரு வேலை லேடிங்” என்பதற்கு சரியான இந்தி சொல் இல்லாமையால் அதனை ஆங்கிலத்திலேயே குறிப்பிட்டுள்ளீர்களே என்றும் கருதுகிறேன். ஏனெனில் இந்தி மொழியில் “கம்ப்யூட்டர்”, “மவுஸ்” போன்ற ஆங்கிலச் சொற்களுக்குக் கூட சரியான இந்தி பெயர்கள் இல்லை. அவற்றை இந்தியில் கூட “கம்ப்யூட்டர்”, “மவுஸ்” என்றே அழைக்கின்றனர். இந்தியில் இவற்றுக்கு மொழிபெயர்ப்பு இருக்குமானால், நீங்கள் பதில் அளிக்கும் போது அந்தப் பெயர்களை கூறுங்கள்.

கடல் வழியாக வாணிபம் செய்வது நம் இந்திய நாட்டிற்கு புதிது அல்ல. சோழர் காலத்திலேயே தமிழகத்திலிருந்து கடல் வாணிபம் நடைபெற்று வந்துள்ளது. ஆனால், நமது சரித்திரப் புத்தகங்களில் அது பற்றி அதிகம் கூறப்படுவதில்லை. வடக்கே இறந்த இருந்த சாளுக்கிய வம்சம் முதல் பல வம்சங்களை பற்றி நாம் அதிகம் பேசுகிறோம். ஆனால் தெற்கு இந்தியாவின் மாபெரும் சோழர் ராஜ்யம் பற்றியும், அவர்கள் கடல் வாணிபத்தில் அடைந்த சிறப்புகள் பற்றியும் அதிகம் பேசுவதில்லை. சீன தேசத்திற்கு “சில்க் ரூட்” என்று சொல்லும் பட்டு வளர்ச் சாலை போல சோழர்களுக்கு உரிதான கடல் மார்க்கங்கள் இருந்தன. அந்நாளில் ஐரோப்பியாவில் இருந்த கிரேக்கம், ரோமம் போன்றவர்களுடன் வணிக உறவு வைத்திருந்தனர்.

சோழர்கள் கடல் கடந்து மேற்கத்திய நாடுகளுடன் வாணிபம் செய்துள்ளனர் என்பதற்கு சான்றாக, சோழ நாட்டில் தயாரிக்கப்பட்ட கைவினைப் பொருட்கள் மேற்கத்திய நாடுகளிலும், அந்நாடுகளில் தயாரிக்கப்பட்ட கைவினைப் பொருட் கள் தமிழகத்திலும் தொல்லியல் துறையால் கண்டெடுக்கப்பட்டுள்ளன.

### இரும்பை பயன்படுத்திய காலம்!

இந்த சமயத்தில் இன்னொன்றையும் நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். இந்த உலகம் முழுவதும் மனிதர்கள் இரும்பு பொருட்களை பயன்படுத்திய காலம், அதாவது இரும்புக் காலம் என்பது கிருத்து பிறப்பதற்கு 1200 ஆண்டுகளுக்கு முன்பு தொடங்கியது முன்புதான் என்று எண்ணிக் கொண்டிருந்த வேளையில் தமிழ்நாட்டில் சமீபத்தில் அகழாய்வு செய்யும் போது கிடைத்த இரும்பு பொருட்களின் அடிப்படையில் தமிழகத்தில் இன்றைக்கு 5750 ஆண்டுகளுக்கு முன்பாகவே அதா வது கிருத்து பிறப்பதற்கு 3450 ஆண்டுகளுக்கு முன்பாகவே இங்கு வாழ்ந்த மக்கள் இரும்பினால் ஆன பொருட்களை பயன்படுத்தியுள்ளனர் எங்கள், தமிழ்நாடு முதலமைச்சர், தலைவர் மு.க.ஸ்டாலின் அவர் கள் பெருமையோடு இத் தகவலை உலகுக்கு அறிவித்தார். இந்த பெருமைமிகு அடையாளத்தை ஒன்றிய அரசோ அல்லது நமது பிரதமரோ பாராட்டி ஒரு அறிக்கை கூட வெளியிடவில்லை.

இதுவே இந்த கண்டுபிடிப்பு குஜராத் மாநிலத்தில் கிடைத்தது என்றிருந்தால் இந்த ஒன்றிய அரசு எந்த அளவிற்கு பெரிதாக கொண்டாடி இருக்கும் என்று நினைத்துப் பார்க்கின்றேன். எனவே வட மாநிலங்களைச் சேர்ந்தவர்கள் தமிழ்நாட்டில் தான் இந்த உலகத்திலேயே முதன் முதலாக இரும்புக் காலம் துவங்கி உள்ளது என்பதை அறிந்து மகிழ்ந்து கொண்டாடியிருந்தால் நான் மிகவும் மகிழ்ந்திருப்பேன். ஏன் தமிழ்நாடு இந்திய நாட்டின் ஒரு அங்கம் தானே.



ஏதோ தமிழ்நாடு இந்தியாவிற்கு வெளியே உள்ளதைப் போல ஏன் பார்க்கின்றீர்கள்.? நான் இன்னொரு தகவலையும் இங்கே பதிவு செய்யப் போகின்றேன். இந்தியாவில் உள்ள ஏனைய மாநிலங்களில் உள்ள மீனவர் எவரேனும், அதாவது குஜராத்தைப் போன்ற மாநிலங்களைச் சேர்ந்த மீனவர் எவரேனும் கடல் பயணத்தின் போது கைது செய்யப்பட்டலோ அல்லது ஏதேனும் துயருக்குள்ளானாலோ, இந்திய மீனவர் கைது செய்யப்பட்டனர் அல்லது துயருக்கு உள்ளானார் என்று செய்தி வரும். ஆனால் தமிழ்நாட்டை சேர்ந்த மீனவர்கள் இலங்கை நாட்டு ராணுவத்தினரால் கைது செய்யப்பட்டால் தமிழக மீனவர்கள் கைது என்று செய்தி வருகிறது. அவர்கள் இந்திய மீனவர்கள் என்று சொல்வதில்லை. இதற்கு என்ன காரணம்? நீங்கள் ஏன் தமிழக மீனவர்களை இந்தியர்களாக கருதுவது இல்லை.

### கடல் வாணிபம் தமிழரோடு இணைந்து வளர்ந்தது!

இந்த மசோதாவின் மீது என் கருத்துக்களைச் சொல்லும் போது, இன்னொன்றையும் குறிப்பிட விரும்புகின்றேன். நான் தமிழர்களின் பெருமைகளை குறிக்கும் வகையில் சொன்ன வரலாற்று செய்திகளுடன் குறிப்பிட விரும்புவது யாதெனில் எங்கள் தமிழ்நாட்டைச் சேர்ந்த சுதந்திரப் போராட்ட வீரர் வ.உ. சிதம்பரனார் அவர்கள் பிரிட்டிஷ் அரசு கோலோச்சிய காலத்தில் தமிழ்நாட்டின் தூத்துக்கடியிலிருந்து இலங்கைக்கு 2 கப்பல்களை இயக்கினார். ஆங்கியே அரசின் அச்சுறுத்தலுக்கு இடையே அவர் வெற்றிகரமாக கப்பல் ஓட்டினார். நவீன காலத்தில் கூட, தமிழர் ஒருவர் தான் ஆங்கிலேயர் காலத்திலேயே கடல் வாணிபத்தை துவக்கி வைத்தார்.

எனவே நாங்கள் அவர் பெயரை தூத்துக்கடி துறைமுகத்துக்கு வைத்துள்ளோம். தூத்துக்குடி தொகுதிதான் எங்கள் பாராளுமன்ற கழக குழு தலைவர் கனிமொழி அவர்களின் தொகுதியாகும், இந்நிலையில் ஒன்றிய அரசு தமிழ்நாட்டில் உள்ள அனைத்து துறைறமுகங்களின் வளர்ச்சிக்கும் தேவையானவற்றை செய்ய வேண்டும் என்று எதிர்பார்க்கின்றேன். ஆங்கியேயர் காலத்திலேயே தமிழகத்தில் பாடப்பட்ட பாடல் ஒன்றை உங்களுக்கு கூற விரும்புகின்றேன். “வெள்ளிப்பணிமலையின் மீது உலாவுவோம் மேலைக் கடல் முழுவதும் கப்பல் விடுவோம்” என்று கடல் வாணிபம் தாமிழரோடு இணைந்து வளர்ந்தது என்பது அனைவருக்கும் தெளிவாகப் புரியும்.

இங்கு அவையில் அறிமுகப் படுத்தப்பட்டுள்ள இந்த லேடிங்மசோதா அதாவது சரக்கு பட்டியல் இரசீது சட்டம் எனப்படும் இந்த மசோதா கப்பல்களில் ஒரு இடத்தில் சரக்குகளை ஏற்றிக் கொண்டு சரக்குகளை ஏற்றுபவர் சொல்லும் இன்னொரு இடத்திலுள்ள நபருக்கு, பொறுப்புடன் சரக்குளைக் கொண்டு சேர்ப்பதற்கான உறுதி வழங்கி தரப்படும் இரசீது குறித்த சட்டமாகும் அதாவது ஏற்றுமதி செய்யப்படும் பொருட்களின் பாதுகாப்பாக இன்னொரு இடத்தில் அல்லது துறை முகத்தில் ஒப்படைப்பதை முறைப் படுத்த உருவாக்கப்பட்ட சட்டமாகும். அவையில் இந்த மசோதாவைப் படிக்கும் போது ஏற்கனவே உள்ள சட்டத்தின் மறுப்பதிப்பாகவே உள்ளது. ஒன்றிய அரசு எலக்ட்ரானிக் சிஸ்டம்,ஷைனிங் இண்டியா என்றெல்லாம் பெருமை பேசுவது வாடிக்கை.

### நவீன மயமாக்கும் புதிய யுக்தி இல்லை!

ஆனால், இதுபோன்று நவீன மயமாக்கும் புதிய யுக்தியும், இம் மசோதாவில் காணப் படவில்லை. பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு, இந்த மசோதாவைப்பற்றி விளக்கும் கூட்டத்திற்கு நான் சென்றிருந்தேன். அங்கே பேசிய அதிகாரிகள் இம் மசோதா குறித்து இந்தியில் மட்டுமே விளக்கினார். நான் பெரும் சிரமப்பட்டு அந்த விளக்கத்திற்கு ஆங்கில மொழி பெயர்ப்பை பெற்ற போது, அதில் 1856ஆம் ஆண்டில் இயற்றப்பட்ட லேடிங் சட்டத்துக்கும், இந்த மசோதாவுக்கு பெரிய வித்தியாசம் இல்லை என்பதைக் கண்டு கொண்டேன். அங்கு இருந்த அதிகாரிகளிடமும் ஆங்கில மொழி பெயர்ப்புக்கு ஏன் ஏற்பாடு செய்யவில்லை என்று கடிந்து கொண்டேன். மேலும், அவர்களிடம் ஆங்கிலேயர் காலத்தில் உருவாக்கப்பட்ட இந்த சட்டத்துக்கு உங்கள் அரசின் முத்திரையைக் குத்துவதற்காக 1856வது வருட சட்டம் என்பதற்கு பதிலாக இந்த 2024-ஆம் வருட மசோதாவைக் கொண்டு வந்துள்ளீர்களா என்று கேட்டேன்.

அப்போது ஒன்றிய அமைச்சர் குறுக்கிட்டு பேசினார்.

நான் அமைச்சர், மசோதா அறிமுகப்படுத்தும் போது அவர் பேசியதாக கூறவில்லை. நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கான விளக்கக் கூட்டத்தில் இவ்வாறு பேசிய அதிகாரியின் பேச்சைத் தான் குறிப்பிட்டேன். வேண்டுமானால், அக் கூட்டத்தில் வீடியோவைப் பாருங்கள் அல்லது உங்கள் யுடியூப்பில் வந்துள்ள வீடியோவையாவது பாருங்கள்.

அமைச்சர் அவர்கள் பதிவு செய்யப்பட்ட வீடியோவை பார்த்து, அவ்வாறு பேசிய அதிகாரி யார் என்பதை அறிந்து கொள்ளட்டும்.

(துறைமுகங்கள் துறை அமைச்சர் சர்பானந்தா சோனாவால் குறுக்கீடு)

(விளக்கக் கூட்டத்தில் எனது துறையின் மூத்த அதிகாரிகள் விளக்கம் கொடுத்தனர். உறுப்பினர்கள் கேட்ட கேள்விகளுக்கும், தக்க பதில்கள் வழங்கப்பட்டன. மசோதாவின் ஷரத்துக்கள் சரியாகவே உள்ளன. இதில் மாற்றம் எதுவும் தேவையில்லை. இது சரியான நிலைப்பாடு என்று கருதுகின்றேன். இதில் எந்த பிரச்சனையும் இல்லை. நாங்கள் மசோதவின் ஷாத்துக்களில் எந்த மாற்றமும் இல்லாமல் உறுதியாக இருக்கிறோம் என்பதை உறுப்பினருக்கு தெரிவித்துக்கொள்கின்றேன்)

அமைச்சருக்கு ஏற்பட்டுள்ள தவறான புரிதலை சரி செய்ய விரும்புகின்றேன். அமைச்சர் அவர்கள் அவையில் இந்த மசோதவை தாக்கல் செய்து, விளக்கம் அளித்த போது நான் அவையில் இல்லை என்று கருதிக் கொண்டு பேசுகின்றார் நான்; அப்போது அவையில் இருந்தேன் என்பதை அவருக்கு தெளிவுபடுத்துகின்றேன்.

நான் சொல்வது என்ன வென்றால், விளக்க கூட்டத்தில் பேசிய அதிகாரிகள் தான் பழைய சட்டத்துக்கும் , இந்த மசோதாவிற்கும் எந்த வித்தியாசமும் இல்லை என்று கூறினார். நான் அவர்களிடம் ஆங்கிலேயர் காலத்தில் இயற்றப்பட்டது என்பதால் மட்டுமே அதே சட்டத்தை, இந்த மசோதா மூலம் மீண்டும் சட்டமாக்கினீர்களே என்று கேட்டதற்கு அங்கு இருந்த அதிகாரிகள் சிரித்தனர் என்பதை தான் கூறினேன்.

நீங்கள் சொல்வதை நான் முழுவதுமாக புரிந்து கொண்டேன். அந்தக் கூட்டத்தில் அவ்வாறு அந்த அதிகாரிகள் பேசியதாக நீங்கள் சொன்ன காரணத்துக்காக நான் அமைச்சர் அவர்களுக்கு பேரவைக்கு தக்க விளக்கம் தர வாய்ப்பு கொடுத்தேன். இதில் எனக்கு வேறு எந்த தனிப்பட்ட கருத்தும் இல்லை.

எனது கருத்துக்களை ஏற்று, அமைச்சர் அவர்களை பதில் சொல்லும்படி சொன்னதற்கு என் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். ஏனெனில் இந்த அவையில் 50க்கும் மேற்பட்ட உறுப்பினர்கள் இதைவிட முக்கியமான பிரச்சினைகளில், அவையின் கவனத்தை ஈர்க்க பேரவையின் மத்தியப் பகுதிக்கு வந்து கூச்சலிட்டாலும் இந்தப் பேரவையின் தலைவராக பொறுப்பிலுள்ளவர்கள், எந்த நடவடிக்கையும் எடுப்பதில்லை. எனவே நான் மீண்டும் ஒரு முறை என் நன்றியைத் தங்களுக்குத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

தமிழர்கள் அனைத்து மக்களையும் உறவினர்களாகக் கருதி அன்புடன் வாழ விரும்புவர்கள், ‘யாதும் ஊரே யாவரும் கேளிர்’ என்னும் கொள்கையை உள்ளத்தில் ஏந்திய வர்கள். ஆனால் ஆளும் கட்சியினர் ஏன் எங்களை எதிரிகள் போல் கருதுகின்றனர் என்று தெரியவில்லை.

### தமிழர்களை மதிக்கக் கற்றுக்கொள்ளுங்கள்!

நான் ஏற்கனவே கூறியபடி தமிழில் ஒரு பாடல் உண்டு ‘திக்கெட்டும் செல்வீர் திரண்ட செல்வங்கள் யாவும் கொண்டு வருவீர்’ என்னும் கருத்துள்ள பாடலில் சொல்லியுள்ளது போல தமிழர்கள் அனைத்து நாடுகளுக்கும் சென்று உழைத்து செல்வம் ஈட்டி வருகின்றனர். இங்கே பொருள் திரட்டுவது மட்டுமல்லாமல் அங்கேயெல்லாம் உள்ள கலை அறிவியலையும் நம் நாட்டிற்கு கொண்டு வருகின்றனர்.

எங்களுக்கென்று ஒரு மொழி உள்ளது. அந்த மொழியை மதிக்கக் கற்றுக் கொள்ளுங்கள். எங்களுக் கென்று பண்பாடு மாற்றும் பழக்க வழக்கங்கள் உள்ளன. அவற்றுக்கும் மதிப்பளிக்க, இங்கே ஆளும் பொறுப்பிலுள்ளவர்கள் கற்றுக்கொள்ள வேண்டும். அனைத்து மாநில மக்களுக்காகவும், தான் நான் பேசுகிறேன். நாட்டிலுள்ள அனைத்து பிரிவு மக்களையும் நேசிக்க கற்றுக்கொள்ளுங்கள். இது போன்ற கருத்துக்களை சொல்லச் சொன்னால் சொல்லிக் கொண்டே போகலாம் . நான் தற்போது மசோதாவின் மீது சில கருத்துக்களைக் கூற விரும்புகின்றேன். இந்த மசோதாவில் தேசிய நீர் வழி போக்குவரத்து பற்றி கூறப்பட்டுள்ளது.

பத்து ஆண்டுகளுக்கு முன்பே நீர் வழி போக்குவரத்து வளர்ச்சி பற்றி இந்த அரசால் பேசப்பட்டது. ஆந்திரப் பிரதேசத்தில் உள்ள எலூரு முதல் பாண்டிச்சேரியை இணைக்கும் தேசிய நீர் வழி போக்குவரத்து என்று ஒரு திட்டம் உள்ளது.

இது எனது தொகுதியான வடசென்னை வழியாகச் செல்கிறது. நான் இந்த திட்டத்தை உடனடியாக நிறைவேற்றித் தரவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். இத் திட்டம் செயல்படுத்தப்பட்டால் சரக்கு போக்குவரத்து மிகவும் எளிதாகும். குறைந்த செலவில் சரக்குகளை வேறு ஊர்களுக்கு அனுப்ப முடியும். சரக்குகளை சிறு கப்பல்கள் மற்றும் படகுகள் மூலம் அனுப்புவதற்கு உண்டாகும் செலவை விட இரயிலில் அனுப்பும் போது இருமடங்கு செலவாகும் என்றும் லாரிகள் மற்றும் கண்டெய்னர்கள் மூலம் சாலை வழியே அனுப்பும் போது 4 மடங்கு செலவாகிறது என கணக்கிடப்பட்டுள்ளது.

எனவே இந்த தேசிய நீர் வழி போக்குவரத்து திட்டம் செயல்படத்தப்பட்டால், தமிழ்நாடும் நல்ல பயனடையும், தொழில் வளர்ச்சியும், வர்த்தகமும் பெருகும். எனவே இத்திட்டத்தை விரைவில் செயல்படுத்த வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். இந்த சரக்கு பட்டியல் இரசீது சட்ட மசோதவிற்கு ஆங்கிலத்திலேயே பெரியட்டமைக்கும் அமைச்சர் அவர்களுக்கு எனது நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

இவ்வாறு டாக்டர் கலாநிதி வீராசாமி பேசினார்.



கும்முடிப்பூண்டி தொகுதி. மாதர்பாக்கம் கிராமத்தை சேர்ந்த ஏசு என்பவரின் கோரிக்கையை ஏற்று உடனடியாக காதுகேட்கும் கருவியை டி.ஜெ.கோவிந்தராஜன் எம்.எல்.ஏ. வழங்கினார். உடன் மு.மணிபாலன், எஸ்.ரமேஷ், இரா.அறிவழகன், மு.பாஸ்கர், வேதாச்சலம், எஸ்.ராமஜெயம், டி.கே. ராஜா, குப்பன், கே.வி.நாகராஜ், ஏடூர் ஜெயா, வினாயகம், சாம், தங்கம், ஏலியம்பேடு பாலா, வி.கணேஷ்பாபு உள்ளிட்ட நிர்வாகிகள் பங்கேற்றனர்.



சென்னை கிழக்கு மாவட்டம் வில்லிவாக்கம் கிழக்கு பகுதி பாக முகவர்கள் கூட்டம் .சௌந்திரபாண்டியன் பள்ளி வளாகத்தில் பகுதி செயலாளர் வே.வாசு.தலைமையிலும் சட்டமன்ற உறுப்பினர் அ.வெற்றிஅழகன் முன்னிலையில் நடைபெற்றது. இதில் வில்லிவாக்கம் தேர்தல் பொறுப்பாளர் ஓ.ஏ. நாகலிங்கம் கலந்து கொண்டு ஆலோசனை வழங்கினார். இதில் பகுதி கழக நிர்வாகிகள், வட்ட செயலாளர்கள், ஊடக பொறுப்பாளர்கள், பாக முகவர்கள் கலந்து கொண்டனர்.

### கா.வீ.தியாகராஜன் தலைமை! எஸ்.அரவிந்த் ரமேஷ் எம்.எல்.ஏ. - வி.இ.மதியழகன் முன்னிலை! பிரபாகர்ராஜா எம்.எல்.ஏ. வரவேற்புரை!

# சென்னை தெற்கு மாவட்ட இளைஞர் அணி சார்பில் பொம்மலாட்ட நிகழ்ச்சி - கண்டன பொதுக்கூட்டம்!

## காரம்பாக்கம் கணபதி எம்.எல்.ஏ. பங்கேற்பு! மருத்துவர் யாழினி சிறப்புரை!

சென்னை, மார்ச் 17-

தமிழ்நாடு முழுவதும் இந்தி திணிப்பு நிதி பகிர்வில் பாரபட்சம் தொகுதி மறு சீரமைப்பில் அநீதி குறித்து கண்டன பொதுக்கூட்டம் நடைபெற்று வருகிறது.

சென்னை தெற்கு மாவட்டம் சோழிங்கநல்லூர் தொகுதி இளைஞர் அணி சார்பில் நேற்று முன்தினம் (15.03.2025) சனிக்கிழமை மாலை 5 மணி அளவில் சோழிங்கநல்லூர் கிழக்கு பகுதி 194வது (அ) வட்டத்தில் ஈஞ்சம்பாக்கம் கிழக்கு கடற்கரை சாலையில் மாவட்ட இளைஞர் அணி துணை அமைப்பாளர் கா.வீ.தியாகராஜன் தலைமையில் சோழிங்கநல்லூர் சட்டமன்ற உறுப்பினர் எஸ்.அரவிந்த ரமேஷ், மண்டல குழு தலைவர்கள் வி.இ.மதியழகன் ஆகியோர் முன்னிலையில் விருகம்பக்கம் சட்டமன்ற உறுப்பினர் ஏ.எம். வி.பிரபாகர்ராஜா, வட்ட கழக செயலாளர்கள் எஸ். கர்ணா, கி.சத்யவேலன் மாமன்ற உறுப்பினர் விமலா கர்ணா, து.ராஜா , தாஸ் , வி.எஸ்.சுதா, ரேவதி தியாகராஜன் ஆகியோர் வரவேற்புரை ஆற்றினார்கள்.

இந்நிகழ்வில் தலைமைக் கழக பேச்சாளர் மருத்துவர் யாழினி, கழக இளம் பேச்சாளர் ஹேமநாதன் ஆகியோர் சிறப்புரை ஆற்றினார்கள்.

மேலும் இக்கூட்டத்தில் மதுரவாயல் சட்டமன்ற உறுப்பினர் காரம்பாக்கம் கணபதி, மாவட்ட துணை செயலாளர் பாலவாக்கம் த.விஸ்வநாதன், பாலவாக்கம் மு.மனோகரன், பொதுக்குழு உறுப்பினர் எம்.கே.ஏழுமலை, ஆ.அரிகிருஷ்ணன், சைதை ம.அன்பரசன் மாமன்ற உறுப்பினர்கள் பாபு, சங்கர், சங்கர்கணேஷ், கிரி, விஜயகுமார், குமரேசன், மாவட்ட துணை எம்.விநாயகமூர்த்தி ,ஜெ.இ. பாண்டியன், ஆர்.கிருஷ்ணகுமார், எஸ். ரவி, எம்.பார்த்திபன், அருண்,

வட்ட செயலாளர் சாந்தப்பன், சீனிவாசன், இரா.நாகேந்திரன், ம.ஸ்ரீகாந்த், எஸ்.சதிஷ், வட்ட நிர்வாகிகள் முனுசாமி, எஸ்.கே .பாலாஜி, ரேவதி தியாகராஜன், கார்திகேயன், சத்தியசீலன், சக்திவேல், பகுதி துணை அமைப்பாளர்கள் பா.கெவின், டோ.சாலமோன், ஆ.தேவசுதான், பஷீர் அகமத், ஜி.பி. கோபி, ப.பிரகாஷ், ஜெய்குமார், பொண்மனசெல்வன், ரவிந்திரன், சங்கர் சங்குமார், சத்தியா, சுனிதா, ரகு லிவிங்ஸ்டன், ரவி சசி, சஞ்சய், ரிதீஷ், மணி, டாணி,பாலு, ரகீம், பிரபு, பாபு , லோகேஷ் மற்றும் கழக மூத்த முன்னோடிகள் கண்டன பொதுக்கூட்டத்தில் கலந்துகொண்டனர்.

பகுதி அமைப்பாளர் நாகேந்தி ரன் நன்றி உரையாற்றினார்.



சென்னை தெற்கு மாவட்டம் சோழிங்கநல்லூர் தொகுதி இளைஞர் அணி சார்பில் 194 (அ) வட்டத்தில் ஈஞ்சம்பாக்கம் கிழக்கு கடற்கரை சாலையில் மாவட்ட இளைஞர் அணி துணை அமைப்பாளர் கா.வீ. தியாகராஜன் தலைமையில் எஸ்.அரவிந்த ரமேஷ் எம்.எல்.ஏ., வி .இ.மதியழகன் எம்.சி. ஆகியோர் முன்னிலையில் ஏ.எம் .வி.பிரபாகர்ராஜா எம்.எல்.ஏ. வரவேற்பில் ஒன்றிய அரசைக் கண்டித்து பொம்மலாட்ட நிகழச்சியுடன் கண்டனப் பொதுக்கூட்டம் நடைபெற்றது. இதில் மருத்துவர் யாழினி சிறப்புரையாற்றினார். காரம்பாக்கம் கணபதி எம்.எல்.ஏ. உள்ளிட்ட கழகத்தினர் பங்கேற்றனர்.

